தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அட்டப்பாடியில் இருந்து தமிழர்களை வெளியேற்றப் படுவதை தடுக்க நடவடிக்கை: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

கேரள மாநிலம் அட்டப்பாடியில் இருந்து தமிழர்களை வெளியேற்றாமல் தடுக்க தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அச்சங்கத்தின் தலைவர் சு.பழனிசாமி, முதல்வர் ஜெயலலிதாவிற்கு அனுப்பிய கோரிக்கை மனு விவரம்:

கேரள மாநிலம் பாலக்காடு அருகே உள்ள அட்டப்பாடியில் நூற்றாண்டு காலமாக குடியேறி தமிழர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் பழங்குடியினர் நிலத்தை மீட்பது என்ற திட்டத்தின் கீழ் கேரள மக்கள் தமிழர்கள் வெளியேற்ற தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே கேரள அரசின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி, பெருமான்மை தமிழர்களை அட்டப்பாடியில் இருந்து அகற்றும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள விவசாய நிலங்களில் கெயில் நிறுவனம் சார்பில் எரிவாயு குழாய் பதிக்கும் பணிக்கு எதிராக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. இதில் மேல்முறையீட்டு வழக்கில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து விவசாய சங்கங்களின் நிர்வாகிகளை அழைத்து பேசுவதுடன் பொறியாளர் அடங்கிய நிபுணர் குழுவை அமைத்து அறிக்கை தயாரித்து நீதிமன்றத்தில் சமர்பிக்க வேண்டும்.

யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைவதை தடுக்கவும், விவசாய பயிர்களை நாசப்படுத்துவதை தடுக்கவும் இரும்பு தூண்களை நிறுத்தி முள் கம்பி வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கு தொடர்ச்சி மலை பொள்ளாச்சிப் பகுதியில் பெய்யும் மழைநீர் கேரளாவிற்குள் சென்று வீணாக கடலில் கலந்து வருகிறது. அதனை விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் ஆனைமலையாறு, நல்லாறு பாசனத்திட்டம் உருவாக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த பாசனத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கோவை மாவட்டத்தில் பாசன வசதி இல்லாத கிணத்துக்கடவு பகுதியில் உள்ள பெருமளவு நிலங்கள் பாசன வசதி பெறும்.

ஒவ்வொரு 10 ஏக்கர் நிலத்திற்கும் மழைநீர் சேகரிப்பு மற்றும் கசிவு நீர்க் குட்டைகளை அரசே அமைத்து நிலத்தடி நீரை செறவூட்ட ஆவணம் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

### 13-ம் தேதி முதல் மழை அதிகரிக்கும்

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள மாதி புயல், வலுவிழந்து தமிழகத்தை நோக்கி வந்துக் கொண்டிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால், அடுத்த சில நாள்களுக்குள் மாதி புயலானது காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவோ, தாழ்வு நிலையாகவோ வலுவிழக்கலாம்.சென்னைக்கு 610 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ள மாதி புயல் வடக்கு நோக்கி நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக வரும் 13-ஆம் தேதி முதல் தமிழகத்தில் மழை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பாசன நீரின் தன்மைக்கு ஏற்ப பயிர்சாகுபடி செய்ய வேண்டும்: வேளாண்மை உதவி இயக்குநர்

மண்வளம் பாதிக்கப்படாமல் பாசன நீரின் தன்மைக்கு ஏற்ப பயிர்சாகுபடி செய்து பயன் பெற விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து செய்யாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.செல்வராஜீ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்து இருப்பாதாவது:

உப்புத் தன்மை மற்றும் கார்தன்மை உள்ள பாசன நீரை விவசாயிகள் தொடர்ந்து பயன்படுத்து வருதால் மண்வளம் பாதிப்பதோடு விளைச்சலும் குறைய வாய்ப்புள்ளது. மேலும், விவசாயிகள் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன

கருவிகளை பயன்படுத்தி வருவதால் உப்புத் தன்மையுள்ள நீரால் பாசன கருவிகள் குறுகிய காலத்திலே பாதிப்படைய அதிக வாய்ப்புள்ளது. இதுப் போன்றக் காரணங்களால் பராமரிப்பு செலவும் அதிகமாக்கூடும்.

மேற்படி குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பாசன நீரை பரிசோதனை செய்து மண்வளம் பாதிக்கப்படாமல் நீரின் தன்மைக்கேற்ப பயிர் செய்வது விவசாயிகளுக்கு பெரும் பயனை அளிக்ககூடியதாகும்.

மாதிரி பாசன நீரை எடுப்பதற்கு சுத்தமான கண்ணாடி பாட்டில் அல்லது பிளாஸ்டிக் பாட்டிலை பயன்படுத்த வேணடும். கிணறு, ஆழ்துளை கிணறுகளில் இருந்து நீரின் மாதிரி சேகரிக்கும் பொழுது பம்புசெட்டிலிருந்து 10 முதல் 30 நிமிடம் வரை நீர் வெளியேறிய பின்னர் நீர் மாதிரியை சேகரித்தல் நல்லது.

பின்னர் ஆய்வுக்கு அனுப்பி பரிசோதனையின் ரிசல்ட்டின் படி வேளாண்மைத் துறையினர் தெரிவிக்கும் தகவல்படி விவசாயத்தில் ஈடுபட்டால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன், தேவையான அளவுக்கு விளைச்சல் கிடைக்க வாய்ப்புள்ளது.

மேலும் இது குறித்த தகவல்களை அறிய விரும்பும் விவசாயிகள் தங்கள் வட்டாரப் பகுதியில் உள்ள களப் பணியாளர்களை தொடர்புக் கொள்ளலாம் என தெரிவித்து உள்ளார்.

<u>சோளிங்கரில் கோமாரி நோய் தாக்கி இறந்த பசு சடலம் ஏரியில் வீச்சு</u>

சோளிங்கர் ஏரியில் கோமாரி நோய் தாக்கி இறந்த பசு மாட்டை யாரோ வீசிச் சென்றுள்ளனர்.இதை உடனடியாக அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

வேலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கோமாரி நோய் தாக்கி ஏராளமான ஆடு, மற்றும் மாடுகள் இறந்தன. இந்நோயை தடுக்க கால்நடை துறையினர் நடவடிக்கை எடுத்து வருதோடு நோய் தடுப்பு குறித்து விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கோமாரி நோய் தாக்கி இறந்த பசு மாட்டின் சடலத்தை சோளிங்கர் போலீஸ் குடியிருப்பின் பின் புறம் உள்ள ஏரியில் யாரோ வீசிச்சென்றுள்ளது

செவ்வாய்கிழமை தெரியவந்தது. இதன் காரணமாக அப்பகுதியில் தூர் நற்றம் வீசுகிறது.

இந்த ஏரியை யொட்டி உள்ள ஆழ்துளை கிணறு மூலம் தான் சோளிங்கர் பகுதி மக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மாட்டின் சடலம் அழுகி ஏரி நீரில் கலப்பதால் பல்வித நோய்கள் பரவும் அபாயம் உள்ளது.

உடனடியாக இந்த பசு மாட்டின் சடலத்தை அங்கிருந்து அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>உருளைக்கிழங்கு விற்பனைக்காக மெகா சந்தை அமைக்க கோரிக்கை</u>

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு விற்பனைக்காக மெகா சந்தை அமைக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீலகிரி உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்டத்தில் விளையும் விளைபொருள்களுக்கு, சீதோஷ்ண நிலை காரணமாகவும், போக்குவரத்து தாமதத்தின் காரணமாகவும் நல்ல விலை கிடைக்காத நிலையில் மேட்டுப்பாளையத்திற்கு கொண்டு சென்றுதான் விற்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. மேட்டுப்பாளையத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் தங்களது விருப்பத்திற்கேற்றவாறு விளைபொருள்களை விற்பனை செய்வதில் ஒளிவுமறைவான விலை, சரியான எடையின்மை, கூடுதல் தரகு, இறக்கு கூலி போன்றவற்றால் விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகி வருகின்றனர்.

வியாபாரிகளின் கடைகள் ஓரிடத்தில் இல்லாமல் பல இடங்களில் பரவியுள்ளதால் விவசாயிகள் இந்த குறைகளை தட்டிக் கேட்கவும் முடியாத நிலை உள்ளது.

இந்த நிலையை போக்குவதற்காக சுமார் 200 வியாபாரிகள் ஆங்காங்கே வியாபாரம் செய்வதை விடுத்து, ஒரே இடத்தில் வியாபாரம் செய்வதற்காக மெகா சந்தை அமைப்பதுதான் இப்பிரச்னைக்கு தீர்வாகும். நிலம் இல்லாத நிலையில் மெகா சந்தை செயல்படாமல் உள்ளதாக தெரிகிறது. ஆனால், இதுதொடர்பாக கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து கோரிக்கைகள் வைத்த போதிலும எத்தகைய தீர்வும் காணப்படாமலேயே உள்ளது.

அரசு மற்ற பணிகளுக்காக கட்டாயமாக நில ஆர்ஜிதம் செய்து பணிகளை நிறைவேற்றி வரும்போது விவசாயத்தின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு

மெகா சந்தை ஆரம்பிக்காமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும். நலிந்துவரும் விவசாயம், குறைந்துவரும் விவசாயிகளின் எண்ணிக்கை ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு மேட்டுப்பாளையம் சுற்று வட்டாரத்தில் தேவையான நிலத்தை ஒதுக்கீடு செய்து மெகா சந்தை ஆரம்பிக்க நிதி ஒதுக்கித்தர வேண்டுமெனவும் கிருஷ்ணமூர்த்தி

தெரிவித்துள்ளார்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.60 லட்சம் மதிப்பிலான மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டையில் வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.60 லட்சம் மதிப்பிலான மஞ்சள் மூட்டைகள் செவ்வாய்க்கிழமை ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமையில் ஏலம் நடக்கும். இதனையடுத்து இந்த வாரம் நடந்த ஏலத்தில் தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

65 கிலோ கொண்ட ஆயிரத்து 682 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில் விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிக பட்சமாக ரூ. 7 ஆயிரத்து 309- க்கும், குறைந்த பட்சமாக ரூ.6 ஆயிர்தது409 க்கும் ஏலம் போனது. அதேபோல் உருண்டை ரகம் அதிகபட்சமாக குவின்டாலுக்கு ரூ.6 ஆயிரத்து 299 - க்கும் குறைந்த பட்சமாக ரூ.5 ஆயிரத்து 516 க்கும் விலை போனது. பனங்காலி அதிகபட்சமாக குவிண்டால் ரூ. 12 ஆயிரத்து 600 -க்கும், குறைந்த பட்சமாக ரூ.8 ஆயிரத்து 700 க்கும் ஏலம் போனது. இதில் ஒரே நாளில் ரூ 60 லட்சம் மதிப்பிலான மஞ்சள் விற்பனையானது.

<u>வேளாண் அறிவியலில் முன்னேற வேண்டும்: அமைச்சர் கிருஷ்ணே பைரேகௌடா</u>

நாடு தன்னிறைவு அடைய வேளாண் அறிவியலில் முன்னேற்றம் அடையவேண்டும் என்று கர்நாடக வேளாண்துறை அமைச்சர் கிருஷ்ணேபைரேகௌடா தெரிவித்தார்.

பெங்களூருவில் செவ்வாய்க்கிழமை இந்திய தொழில்வர்த்தக கூட்டமைப்பு சார்பில் 3-வது தேசிய வேளாண் உயிரி தொழில்நுட்ப 2 நாள் மாநாடு தொடங்கி வைத்து அவர் பேசியது: 12-வது ஐந்தாண்டு திட்டத்தில் 4 சதம் வேளாண் பயிர் உற்பத்திய பெருக்க முடிவு செய்துள்ளோம். ஆனால் தற்போது 2 முதல் 3 சதம் மட்டும் வேளாண் உற்பத்தி உள்ளது. வேளாண் உற்பத்திக்கு தேவையான பல தொழில் நுட்பங்கள் இருந்தாலும், அதில் 50 சதம் மட்டுமே நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். குறிப்பாக உயிரி தொழில் நுட்பத்தை நாம் அதிக அளவு புறக்கணித்து வருகிறோம். வேளாண் உற்பத்திக்கு புதிது புதிதான அறிவியல் தொழில்நுட்பங்கள் தேவை. உயிரி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள் அதிக அளவு விழிப்புணர்வு இல்லாமல் உள்ளனர். அவர்களுக்கு இதன் பயன்களை விவசாய பல்கலைகழங்கள் விளக்கி கூற வேண்டும். அண்மையில் நாடு பெரும் பொருளாதார பிரச்னையில் சிக்கி உள்ளது. அறிவியல் தொழில் நுட்பங்களை பயன்படுத்திக் கொண்டு உணவு உற்பத்தியை பெருக்குவதன் மூலம், பொருளாதாரத்திலும், உணவு உற்பத்தியிலும் நாடு தன்னிறைவு அடைய முடியும் என்றார் அவர். நிகழ்ச்சியில் இந்திய தொழில்வர்த்தக கூட்டமைப்பு அஸ்வின் ஷ்ரோப், தேசிய உயிரி தொழில்நுட்ப குழுவின் தலைவர் கிரண்மஜும்தார், விவசாய பல்கலைக்கழக துணை வேந்தர் நாராயணகௌடா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<u>கோமாரியைத் தவிர்க்க சோதனைச்சாவடி</u>

மதுரை மாவட்டத்தில் பசுக்களுக்கு வரும் கோமாரி பாதிப்பைத் தவிர்க்க வருங்காலங்களில் சோதனைச் சாவடி மையங்கள் அமைக்க பரிசீலிக்கப்படுவதாக கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிள் தெரிவித்தனர்.

மதுரை மாவட்டத்தில் 1 லட்சத்து 87 ஆயிரம் மாடுகள் உள்ளன. இதில் 647 கன்றுகள் மற்றும் சினை பசுக்கள் உள்ளன. கோமாரி நோய் பாதிப்புக்கான

தடுப்பூசி கடந்த சில மாதங்களாகவே மதுரை ஊரகப்பகுதியில் பசுக்களுக்கு செலுத்தப்பட்டுவந்தது. இதனால் 62 பசுக்கள் மட்டுமே கோமாரி பாதிப்பு அறிகுறிக்கு ஆளாகின. ஆனால், உடனடியான சிகிச்சையால் அவை குணப்படுத்தப்பட்டுள்ளன. ஊரகப்பகுதியில் உயிரிழந்ததாகக் கூறப்படும் பசுக்களை பிரேதப் பரிசோதனை நடத்தியதில் அவை கோமாரி பாதிப்பில் இறக்கவில்லை என்பது தெரியவந்துள்ளதாகவும், வேறு பாதிப்பில் அவை இறந்திருக்கலாம் என்றும் கால்நடை பராமரிப்புப் பிரிவு மருத்துவர்கள் தெரிவித்தனர். மதுரை மாவட்டத்தில் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பசுக்கள் மூலமே நோய் பரவியதாகவும், இதைத் தவிர்க்கும் வகையில் வரும் காலங்களில் கால்நடை சோதனை மையங்கள் மாவட்ட எல்லையில் அமைக்க அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாகவும் கால்நடைப் பராமரிப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

<u>நோய்களுக்கு மருந்தாகும் ஆண்டிபட்டி பகுதி முருங்கை கீரைகள்</u>

ஆண்டிபட்டி பகுதியில் உள்ள முருங்கைக் கீரைகள் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் தயாரிப்பதற்கு பறித்து செல்லப்படுகிறது.

ஆண்டிபட்டி, கதிர்நரசிங்காபுரம், கண்டமனூர், கடமலைக்குண்டு பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் ஒட்டு முருங்கை மற்றும் விதை முருங்கை பயிரிடப்படுகிறது. இம்முருங்கைகள் பயிரிடப்பட்டு 6 மாதம் முதல் பல்லாண்டுகளுக்கு மகசூல் தரக்கூடியது.இந்த முருங்கை 3 வருடங்களுக்கு மேல் வளர்ச்சியை பொறுத்தும், பெரியகுளம்-1 முருங்கை வருடத்திற்கு ஒரு முறையும் மரத்தை கவாத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு கவாத்து செய்யப்படும் முருங்கை கீரைகள் வீணாகி வந்தன. ஆனால் தற்போது இவ்வாறு பறிக்கப்படும் கீரைகள் நிழலில் உலர்த்தப்பட்டு வியாபாரிகள் மூலம் சென்னை மற்றும் டெல்லியில் உள்ள மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு ஒரு கிலோ கீரை ரூ.30 என்ற அளவில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. அவ்வாறு கொண்டு செல்லப்படும் கீரைகள் சர்க்கரை நோய் மற்றும் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கப்படுகிறது என்கின்றனர் விவசாயிகள்.

இது குறித்து முருங்கை கீரை வியாபாரி பழனிச்சாமி கூறியது:

காய்த்த ஒன்று அல்லது மூன்று வருடங்கள் ஆன முருங்கை மரங்களை கவாத்து செய்வார்கள். அவ்வாறு செய்யப்பட்ட மரங்களில் உள்ள கீரைகள் வீணாகிவிடும். அவ்வாறு வெட்டப்படும் தோட்டத்தின் உரிமையாளருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து நாங்களே மரத்தை வெட்டி, கீரையை எடுத்துக் கொள்வோம். இவ்வாறு பறிக்கப்படும் கீரையை ஒரு வாரத்திற்கு காயவைத்து மருந்துகள் தயாரிக்கும் கம்பெனிகளுக்கு அனுப்பி வைக்கிறோம் என்றார்.

விவசாயிகளுக்கு நெல் களை எடுக்கும் இயந்திரம்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை சார்பில் மானிய விலையில் நெல் களை எடுக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஆறுமுகம் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பி. வெள்ளைச்சாமி, சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசின் மானிய விலையில் நெல் களை எடுக்கும் இயந்திரத்தை 10 பயனாளிகளுக்கு வழங்கி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே. காளிமுத்து சிறப்புரையாற்றினார்.

கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய விதைநெல்லால் விளைச்சல் பாதிப்பு

இடைக்காட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் கூட்டுறவு கடன் சங்கங்களில் வாங்கி நடவு செய்த விதைநெல் குறுகிய காலத்திலேயே வளர்ந்து கருகிப்போய் விட்டதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

மானாமதுரை ஒன்றியத்தில் பெரும்பாலும் வைகைப் பாசனத்தை நம்பியே விவசாயம் நடைபெறுகிறது. மழைக்காலம் தொடங்கியும் சரிவர மழை இல்லாததால் அவ்வப்போது பெய்த மழையை பயன்படுத்தியும் கிணற்று தண்ணீரைக் கொண்டும் விவசாயிகள் பணிகளைத் தொடங்கி விதைப்பு செய்துள்ளனர்.

பல புயல் சின்னங்கள் ஏற்பட்டும் மானாமதுரை பகுதியில் சரிவர மழை இல்லை. நடவு செய்த நாற்றுக்கள் தண்ணீரில்லாமல் கருகத் தொடங்கி விட்டன. மழை பெய்தால் மட்டும் விவசாயம் தப்பிக்கும் என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர். இதற்கிடையில் மானாமதுரை ஒன்றியத்தைச் சேர்ந்த இடைக்காட்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கூட்டுறவு கடன் சங்கத்தில் விதைநெல் வாங்கி நாற்று

வளர்த்து நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள், உரிய காலத்திற்கு முன்பே பரிந்து, கருகி விட்டதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இது குறித்து இடைக்காட்டூரைச் சேர்ந்த பெண் விவசாயி தியாகவள்ளி(62) கூறியதாவது: நாங்கள் பல ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறோம். இங்குள்ள கூட்டுறவு கடன் சங்கத்தில் ஏ.டி.டி 45 ரக நெல்விதை கொடுத்தார்கள். அதை வாங்கி நாற்று வளர்த்து 6 ஏக்கரில் நடவு செய்தோம்.

90 நாட்களில் வளர்ந்து பரிய வேண்டிய நெற்பயிர்கள் 45 நாட்களிலேயே பரிந்துவிட்டன.

போதுமான வளர்ச்சி இல்லாமல் பரிந்து, நெல்மணிகள் முளைக்காமல் கருகிவிட்டன. இதனால் எனக்கு 300 மூடை நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்றார். இடைக்காட்டூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் விதைநெல் வாங்கி நாற்று வளர்த்து  நடவு செய்த இதுபோன்ற பல விவசாயிகள் பயிர் சாவியாகிவிட்டதால் விவசாயத்துக்காக வாங்கிய கடனை எப்படி திருப்பி செலுத்துவது எனத் தெரியாமல் கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலர் முத்துராமலிங்கபூபதி கூறும்போது,  நடவு செய்த 90 நாட்களில் பரிந்தால் தான் விளைச்சல் காண முடியும். 45 நாட்களிலேயே பரிந்ததால் நெல் பயிர்கள் கருகிவிட்டன. இதேநிலை மானாமதுரை ஒன்றியம் முழுவதும் உள்ளது.

எனவே இடைக்காட்டூர் உள்ளிட்ட இந்தப் பகுதியில் விதைநெல் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்றார். கூட்டுறவு கடன் சங்க வட்டாரத்தில் கேட்டபோது, கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு கொடுத்து விற்பனை செய்யச் சொன்ன விதை நெல்லைத் தான் விற்பனை செய்தோம். பல கூட்டுறவு கடன் சங்கங்களில் இந்த விதைநெல் ரகம் மூட்டைமூட்டையாக விற்பனையாகமாமல் குவித்து வைக்கப்பட்டுள்ளது என்றனர்.

<u>மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு</u>



மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்ததால், பாசனத்திற்கு நொடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது.

திங்கள்கிழமை டெல்டா பாசனப் பகுதிகளில் மழை இல்லாததால், பாசனத் தேவை அதிகரித்தது.

இதனால், திங்கள்கிழமை காலை முதல் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 9 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

செவ்வாய்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 83.67 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 1,624 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 45.71 டி.எம்.சியாக இருந்தது

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாடுகளை சினைப்படுத்தும் வழிமுறைகள்**

அனைத்து உயிர்களுக்கும் இனப்பெருக்கம் என்பது அவசியத்திலும் அவசியம். இந்த நடவடிக்கைக்கு, பெண் இனம் குறிப்பிட்ட நாள் இடைவெளியில், சினைப் பருவத்திற்கு தயாராகும். இதைச் சினைப்பருவச் சுழற்சி என்பர். மாடு, எருமைகளில் இச்சுழற்சி 18 முதல் 21 நாட்களுக்கு ஒருமுறை நடக்கிறது. இச்சுழற்சி 10 நாட்களுக்குள் அல்லது 30 நாட்களுக்கு மேல் இருந்தால் சூலகத்தில் பிரச்னை உள்ளது எனலாம்.

கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்கள் கடைபிடிக்கப்படுகின்றன. ஆனால் கிராமப்புறங்களில் பலர், அமாவாசை, பவுர்ணமியில்தான் மாடுகள் சினைக்கு வருமென தவறான நம்பிக்கை கொண்டுள்ளனர். கடைசியாக மாடுகள் சினைக்கு வந்த தேதியில் இருந்து, 18 முதல் 21 நாட்களுக்குள் சினைப்பருவத்திற்கு வரும். அந்நாட்களில் தினமும், காலை, மாலையில் மாடுகளில் சினைப்பருவ அறிகுறி தெரிகிறதா என கவனிக்க வேண்டும்.

**சினைப்பருவ அறிகுறிகள்:** மாடு அமைதியின்றி காணப்படும். அடிக்கடி கத்தும். தீவனத்தில் நாட்டம் இராது. கறவை மாடுகளில் பால் அளவு குறையும். அடிக்கடி சிறுநீர் கழிக்கும். இனப்பெருக்க உறுப்பில் முட்டை வெள்ளைக் கரு போன்ற திரவம் வடியும். சினைப்பருவ மாடுகள்மீது, மற்ற மாடுகள் தாவும்போது, அவை அமைதியாக இருக்கும். சினைப் பருவ மாட்டின் "யோனி'யில் சுருக்கங்கள் இன்றி தடித்து இருக்கும். அதேசமயம் சில கலப்பின மாடுகளுக்கு, கத்துதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், மற்ற மாடுகள் மீது தாவுதல் அறிகுறிகள் தென்படாது.

எருமை மாடுகளில் சினைப்பருவத்தை கண்டறிவது கடினம். அதன் இனப்பெருக்க உறுப்பில் திரவம் ஒழுகுவது தென்படாது. ஆனால் அடிக்கடி சிறுநீர் கழிக்கும். நீண்ட உறுமல் சத்தத்துடன் கத்தும். அடிக்கடி பின்புறம் திரும்பி பார்க்கும். 90 சதவீத எருமை மாடுகள் மாலை 6 மணி முதல் அதிகாலை 6 மணிக்குள் மட்டுமே

சினைப்பருவத்திற்கு வருகின்றன. சிலமாடுகள் சினைப்பருவத்தில் இருந்தாலும், அறிகுறிகளை முழுமையாக வெளிப்படுத்தாது. இதனை ஊமைச் சினைப்பருவம் என்பர். இம்மாதிரி மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் முறை கையாளப்படுகிறது.

**எப்போது சினைப்படுத்துவது:** பருவத்தே பயிர் செய்வது போன்றதே, சினைப்படுத்துவதும். மாடுகள் 12 முதல் 24 மணி நேரமே சினைப்பருவத்தில் இருக்கும். சினைப்பருவ அறிகுறிகளை வெளிப்படுத்திய 12 மணி நேரத்திற்குள் கருவூட்டல் செய்ய வேண்டும். மாட்டில் இருந்து சினைமுட்டை வெளிப்படும் நேரத்தில், போதுமான எண்ணிக்கையில் உயிருள்ள ஆண் உயிரணுக்கள் இருக்க வேண்டும்.

கருமுட்டை வெளிப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ, மாடுகளுக்கு கருவூட்டல் செய்வதால் சினையாகும் வாய்ப்பு குறைவு. பெரும்பாலான மாடுகள் சினைப்பருவ அறிகுறிகளை முதன்முதலில் வெளிப்படுத்தும்போது அறியப்படுவதில்லை. அதனால்தான் தோராயமாக காலையில் சினைப்பருவ அறிகுறிகள் தோன்றினால் அன்று மாலையிலும், மாலையில் தோன்றினால் அடுத்தநாள் காலையிலும் கருவூட்டல் செய்வது மாடுகள் சினையாக ஏதுவாகும். கருவூட்டல் செய்தபின், தேவையற்ற சில நடைமுறைகளை பலர் கடைபிடிக்கின்றனர். சினைப்படுத்திய மாடுகளை படுக்க விடாமல் கழுத்தை மேலே தூக்கி கட்டி விடுவது, கருவூட்டல் செய்தநாளில் தீவனம், தண்ணீர் தராமல் இருப்பது, சினை ஊசி போட்ட மாடுகளை காளைக்கும், காளையுடன் சேர்ந்த மாடுகளுக்கு உடனே சினை ஊசி போடுவதையும் செய்கின்றனர்.

சினைப்படுத்திய மாடுகளை படுக்கவிட்டால், கருப்பையில் செலுத்திய உயிரணுக்கள் வெளியேறிவிடும் என்பதும் தவறு. மாடுகளை, சினை ஊசி மூலம் சினைப்படுத்தும்போது, மிகக்குறைந்த அளவு (கால் மில்லி) விந்து மட்டுமே கருப்பையின் உட்பகுதியில் செலுத்தப்படும். மேலும் விந்தணுக்கள், கருப்பையில் செலுத்தியவுடன் வேகமாக முன்னோக்கி நகரும் தன்மை கொண்டவை. அவை கர்ப்பப்பைக்குள் செலுத்தப்படுவதால், முழுவதும் வெளியேறாது. சில கலப்பின கிடேரி, மாடுகளில் சினைப்படுத்திய பின், ஓரிரு நாளில் ரத்தம் கலந்த வழு வடியும். இதனாலும் சினைப்பிடிப்பதில் பாதிப்பு ஏற்படாது. இது

சினைப்பிடிக்காமைக்கான அறிகுறியும் இல்லை. எனவே தவறான கருத்துக்களை மாடுவளர்ப்போர் மாற்றிக் கொண்டு, தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும்.

**-டாக்டர் த.ஆனந்த பிரகாஷ்சிங்,**

**ஒரத்தநாடு, தஞ்சாவூர்.**

**நவீன தொழில்நுட்பம்**



**மானாவாரி பருத்தி சாகுபடி நுட்பங்கள்:** புரட்டாசி மாதத்தில் மானாவாரியில் உகந்த பருத்தி ரகங்களை சாகுபடி செய் வதன் மூலம் நல்ல விளைச்சலை பெறலாம். மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மானாவாரி பருத்தி அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. பருவமழை செப்டம்பர் மாதத்தில் தொடங்கும் போது மானாவாரி பருத்தி ரகங்களான கே.சி.2, கே.சி.3, என்.வி.பி.ஆர்.2, எஸ்.வி.பி.ஆர்.4 ரகங்கள் சாகுபடி செய்ய ஏற்றவை. பருவமழை பின் தங்கி செய்யக்கூடிய தூத்துக்குடி மாவட்டத்தில் பெருவாரியான பகுதிகளில் அதிகமான பதத்தில் கருங்கண்ணி பருத்தி ரகங்களான கே-10, கே-11, பி.ஏ.255 சாகுபடி செய்ய ஏற்றவை.

மானாவாரியில் பருத்தி தனிப்பயிராகவோ அல்லது கலப்புப் பயிராகவோ (பயறு, சூரியகாந்தி, மக்காச்சோளம்) சாகுபடி செய்யலாம். தனிப்பயிராக சாகுபடி செய்யும் பொழுது 60 X 3 செ.மீ இடைவெளியிலும், ஊடுபயிராக சாகுபடி செய்யும் பொழுது பருத்தி இணை வரிசையில் 30 செ.மீ இடைவெளியிலும், வரிசை 6 வரிசையில் 60 செ.மீ இடைவெளியிலும் விதைக்கப்படுகிறது.

மானாவாரியில் பெரும்பாலும் முன்பருவ விதைப்பு செய்வது நல்லது. பின்பருவ விதைப்பு செய்வதற்கு விதையை களைப்படுத்துதல் அவசியம் ஆகும். அமில விதை நேர்த்தி செய்து பஞ்சு வைத்த விதையை சமஅளவுள்ள 1 சத புங்கம் இலைகரைசலை 8 மணி நேரம் உலரவைத்து பின்பு நிழலில் உலர்த்த வேண்டும்.

**பயிர் இடைவெளி:** கே.சி.2, கே.சி.3, கே.10, பி.ஏ. 225, கே.11 - 45 X 15 செ.மீ என்.பி.வி.ஆர்.2, எஸ்.வி.பி.ஆர்.4 - 60 X 30 செ.மீ

**உர அளவு:** கே.சி. 2, என்.வி.பி.ஆர்.2, எஸ்.பி.வி. ஆர்.4, கே.சி.3 - 40:20:20 தழை, மணி, சாம்பல் சத்து / எக்டருக்கு

கே.10, கே.11, பி.ஏ.225 (சதுரம்) - 20:0:0 தழை, மணி, சாம்பல்சத்து / எக்டருக்கு

கோடை இதனுக்கு வெளியிடப்பட்டுள்ள என்.வி.பி.ஆர்.2, எஸ்.பி.வி. ஆர்.4 ரகங்கள் மானாவாரியிலும் அதிக விளைச்சலை தருகின்றன. இது மறுதழைவிற்கு ஏற்ற ரகமாக இருப்பதாலும், தத்துப்பூச்சி வைத்தால் வளர்வதிலும், வறட்சியை தாங்கி வளர்வதாலும் மானாவாரிக்கு உகந்த செல்களைக் கண்டறியப்பட்டுள்ளது. கே.சி.3 பருத்தி ரகம் மானாவாரி பகுதிக்கு உகந்ததாக உள்ளது.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள்:** * வேப்பம்புண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ கடைசி உழவுக்கு முன் இட வேண்டும்.

* அமிலவிதை நேர்த்தி, உயிரியல் விதை நேர்த்தி முறையான டிரைக்கோ யூரியா விரிடி, ஒரு கிலோ விதைக்கு

4 கிராம் கலந்து விதைக்க வேண்டும்.

* ஊடு பயிராக குறுகிய கால பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து தத்துப்பூச்சி தாக்குதலைக் குறைக்கலாம்.

* வரப்பு பயிராக சூரியகாந்தி, ஆமணக்கு, துவரை சாகுபடி செய்து காய்ந்த தாக்குதலை கண்டறிய மக்காச்சோளத்தை வரப்பிலும், வாய்க்காலிலும் விதைத்து நன்மை செய்யும் பூச்சிகளான பொதுவண்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். இதனால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைபேன், அசுவினி ஆகியவை கட்டுப்படுத்தப்படுகின்றன.

மானாவாரியில் பின் பட்டத்தில் மழைபெய்யும் பொழுது நாட்டுக் கலப்பையை கொண்டு இடைஉழவு செய்து மண்ணின் ஈரப்பதத்தை காக்க வேண்டும். வறட்சி காலங்களில் 1 சத யூரியாவைத் தெளித்து வளர்ச்சியை அதிகப்படுத்தலாம்.

பூக்கும் கலன்களில் மண்ணில் ஈரப்பதம் இருக்கும் போது (75-90 நாட்கள்) டி.ஏ.பி. 2 சதக் கரைசலைத் தெளித்து விளைச்சலை அதிகப்படுத்தலாம்.
மானாவாரிப் பகுதிகளுக்கு ஒட்டு ரகங்கள் ஏற்றதல்ல. (தகவல்: முனைவர் மா.ஞானசேகரன், முனைவர் அ.இராமலிங்கம், முனைவர் இரா.தங்க பாண்டியன், முனைவர் ப.அமலா பாலு, பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்- 626 125, தொலைபேசி: 04563 - 260 736)

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**மகிழ்ச்சியோடு நெல் வயலில் பணி செய்யும் அறுவடை இயந்திரங்கள்**

மதுரை பகுதியில் விவசாயிகள் நல்ல அனுபவத்தைப் பெற்றவர்கள். பண்ணைத்தொழிலில் காட்சி மாற்றம் என்பார்கள். அதுபோல விவசாயிகள் ஒரே தவணையில் பல்வேறு பணிகளை செய்து பயனடைந்து வருகிறார்கள். காரணம் இப்பகுதியில் பாசனம் அணைக்கட்டுகளிலும், மழையின் காரணத்தினாலும் பயிர் விளைகின்றது. இந்த வருடம் சென்ற வருடத்தைப் போலில்லாமல் மகசூல் அதிகமாக கிட்டி வருகின்றது. நல்ல ரகங்களான ஜேசிஎல், ஜே13, எடீடி 36, எடீடி39, எடீடி45, எஎஸ்டி 16 போன்ற நெல் ரகங்களை சாகுபடி செய்ததில் விவசாயிகள் நெல் அறுவடையைத் துவக்கி உள்ளார்கள்.
அதிசயம் என்னவென்றால் 45லிருந்து 50 மூடை வரை மகசூல் எடுக்கிறார்கள். ஒரு மூடை (66 கிலோ) ரூ.850லிருந்து ரூ.1,000 வரை கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். மேலும் கடந்த வருடத்தை விட வைக்கோல் ஒரு ஏக்கரில் ரூ.4,000லிருந்து ரூ.5,000 வரை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். குறிப்பாக ஜே13 வைக்கோல் நல்ல விலை போகின்றது. உழைக்கும் மாடுகளுக்கும், இதர பணிகளுக்கும் குறிப்பாக கறவை மாடுகளுக்கும் வைக்கோல் தேவை அதிகரித்து உள்ளது.
மதுரை பகுதியில் பள்ள வயல் பகுதிகளிலும் அதிகப் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகின்றது. நெல் உற்பத்திக்கு பள்ள வயல்களும் தேவைப்படுகின்றது. பள்ள வயலில் விஞ்ஞான முறைகளை உபயோகித்து மண் பக்குவம் செய்யாவிடில் மகசூல் கணிசமான அளவில் குறைந்து விடும். விவசாயிகள் விஞ்ஞானிகளுடன்

தொடர்பு கொண்டு அவர்கள் சிபாரிசுபடி பணிகளை செய்ய வேண்டும்.
பள்ளவயல் பகுதியில் ஜிங்க் சல்பேட் உபயோகிக்காத வயலில் நோய் தாக்குதல் அதிகம் கிடைக்கும். இச்சூழ்நிலையில் புகையான் தாக்குதல் இருக்கும். இம்மாதிரி பாதிப்பு இருக்கும் இடத்தில் வயலில் ஐந்து மூடை வரை குறைவாக கிடைத்து விடும்.

நெற்பயிரை நன்கு கவனிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு இலை சுருட்டுப்புழுவை அழிக்க மானோகுரோட்டோபாஸ் 36 இசி 400 மில்லி/ ஏக்கர் அல்லது குளோரிபைரிபாஸ் இசி 500 மில்லி/ஏக்கர் தெளிக்க வேண்டும். மதுரை மாவட்டத்தில் பள்ளவயலில் ஜிங்க் சல்பேட் விவசாய விஞ்ஞானிகள் சிபாரிசுபடி அடிக்க வேண்டும். இது முக்கியமான பரிகாரம் ஆகும். இவ்வாறு செய்யாவிடில் மகசூல் ஐந்து மூடை வரை குறைந்து விடும்.

**தொடர்ந்து நெல் சாகுபடி:** நெல் சாகுபடியில் கை தேர்ந்த மதுரை விவசாயிகள் 45,000 ஏக்கர் நிலப்பரப்பில் வடகிழக்கு பருவமழையை நம்பி நெல் நாற்றங்கால் தயார் செய்து உள்ளார்கள். விவசாயிகள் வைகை அணை நிரம்பிய உடன் நெல் நடவு வேலையை ஆரம்பிப்பார்கள். அதிக அளவில் ஜே 13 நெல்லை நட தங்களை தயார் செய்து கொண்டிருக்கின்றனர். வைகை அணை நிரம்பும் காட்சியும், நிலங்களில் நடவு பணி நடப்பதும் பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருக்கும். இம்மாதிரியான காட்சியை மதுரையில் தான் பார்க்கலாம். இன்று மகிழ்ச்சியோடு நல்ல விலை கிடைக்கும் சூழ்நிலை நெல் கதிர் அடிக்கும் காட்சி அளிக்கும். விவசாயிகள் பார்க்க வேண்டிய இடம் இன்று மதுரையாகும்.

**- எஸ்.எஸ்.நாகராஜன்**

### மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வருகை

சின்னசேலம்சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம், உளுந்து விற்பனைக்கு வந்தது.சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு 500 மூட்டை மக்காசோளம் வந்தது.

அதிகபட்ச விலை ரூ 1286 க்கும், குறைந்தபட்ச விலை ரூ 996க்கும் விற்கப்பட்டது. கடந்த வாரம் 1317 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூபாய் 16 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் ஆகும். இத்தகவலை கமிட்டி கண்காணிப்பாளர் கலைச் செல்வி தெரிவித்தார்.

## விவசாய சுற்றுலா மற்றும் பயிற்சி முகாம்கள் உண்மை விவசாயிகள் புறக்கணிப்பா?

புதுக்கடை: குமரி மாவட்டத்தில் விவசாயம் சம்பந்தமான சுற்றுலா மற்றும் பயிற்சி முகாம்களுக்கு உண்மையான விவசாயிகள் பங்கேற்க வழியில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்தியாவின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. விவசாயம் வளர்ச்சி அடைந்தால் தான், நம் நாடு வளர்ச்சியை நோக்கி பயணிக்கவும், தன்னிறைவு பெற்ற நாடாகவும் வளர முடியும். மேலும், உணவு பொருட்களின் விலை குறைவதுடன் உணவு பஞ்சமும் தீரும். இதற்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், அந்த திட்டங்கள் முழுமையாக விவசாயிகளை சென்றடையாத நிலை உள்ளது. இதனால், வட மாநிலத்தவர்கள் அதிகம் பயன்படுத்தும் வெங்காயம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், மேற்கு வங்கத்தில் உருளைக்கிழங்கால் ஒரு அரசியல் புரட்சியே ஏற்படும் சூழ்நிலை உள்ளது. விவசாயம் செய்யும் உண்மையான விவசாயிகளை அதிகாரிகள் புறக்கணிப்பதால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதை கருத்தில் கொண்டு, அரசு ஒவ்வொரு பகுதியிலும் உள்ள விவசாயிகளை பிற மாநிலங்களுக்கு அழைத்து சென்று, அங்கு விவசாயம் செய்யும் பயிர்கள் குறித்து பயிற்சி முகாம்களையும், வகுப்புகளையும் நடத்தி வருகிறது. இதற்காக அரசு பல லட்சம் ரூபாயை செலவு செய்து வருகிறது. ஆனால், குமரி மாவட்டத்தில் துறை அதிகாரிகள் விவசாயிகளை புறக்கணித்து, சுய உதவிக்குழுக்களில் உள்ள பெண்களையும், உறவினர்களையும் அழைத்து செல்வதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர். இவ்வாறு செல்பவர்கள் முறையாக பயிற்சியில் ஈடுபடுவதில்லை. சுற்றுலா செல்வதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். மேலும், பல அதிகாரிகள் விவசாய சுற்றுலா செல்லாமல், சுற்றுலா சென்றதாக தெரிவிக்கின்றனர். மத்திய, மாநில அரசுகள் விவசாயத்திற்கு பல லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்தும், விவசாயத்தில் எந்த முன்னேற்றமும் காண முடியாமல் தவிக்கிறது.

**வரகு பயிர் சாகுபடி செய்வதில்தியாகதுருகம் விவசாயிகள் ஆர்வம்**

தியாகதுருகம்தியாகதுருகம் பகுதி மானாவாரி நிலங்களில் வரகு சாகுபடியில் விவசாயிகள் சிலர் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.பாரம்பரிய சிறுதானிய வகைகளில் வரகு பயிருக்கு முக்கிய இடம் உண்டு. காலப் போக்கில் இதன் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது. கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்கும் "ஓட்ஸ்' என்பது, வரகு பயிரின் ஒரு ரகமாகும்.

இது சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு சிறந்த உணவாக பயன்படுத்தப்படுகிறது. தியாகதுருகம் பகுதியில் 10 ஆண்டுகள் முன்பு வரை மானாவாரி நிலங்களில் வரகு முக்கிய பயிராக சாகுபடி செய்யப் பட்டது. பருத்தி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டியதால் வரகு பயிரிடுவது குறைந்தது.இருப்பினும் சிலர் ஆர்வமுடன் வரகு பயிரிட்டுள்ளனர். விதைத்த 4 மாதத்தில் விளைந்து பலன் தரக் கூடிய இப்பயிருக்கு பராமரிப்பு செலவு இல்லை. ஏக்கருக்கு 20 மூட்டைகள் மகசூல் கிடைக்கிறது. தற்போதைய மார்க்கெட் நிலவரப்படி மூட்டை 1,000 ரூபாய்க்கு விற்கிறது.கோவில் மூலவர் சன்னதியின் மீது அமைக்கும் கோபுர விமானங்களில் வரகு தானியத்தை கொட்டி நிரப்புவது வழக்கம். இது மின்னல் தாக்கும் போது கருவறை விக்ரகம் சேதமடையாமல் பாதுகாக்கும். இது இன்றும் நடை முறையில் உள்ளது. கோபுரத்தில் கொட்ட புதிதாக கோவில் கட்டுபவர்கள் வரகு தானியத்தை அதிக விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர்.

வரகு தானியத்தை ஆண்டு கணக்கில் இருப்பு வைத்து விற்பனை செய்ய முடியும் என்பதால் பயிரிட்ட விவசாயிகள் கனிசமாக லாபம் ஈட்டி வருகின்றனர்.

**செழித்து வளர்ந்த மஞ்சள்: விவசாயிகள் மகிழ்ச்சி**

சங்கராபுரம்சங்கராபுரம் பகுதியில் சில நாட்களுக்கு முன்பு பெய்த நல்ல மழையால் மஞ்சள் பயிர் நன்கு செழித்து வளர்ந்துள்ளது.சங்கராபுரம் பகுதியில் நெடுமானூர், சோழம்பட்டு, பொய்குனம், காட்டுகொட்டாய், அரசம்பட்டு, பாலப்பட்டு, லக்கினாய்கன்பட்டி, குளத்தூர் கிராமங்களில் விவசாயிகள் 500 ஏக்கர் பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.சில நாட்களுக்கு முன்பு சங்கராபுரம் பகுதி கிராமங்களில் மழை பெய்தது. இதனால் மஞ்சள் நன்கு செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்
ளனர்.

**விவசாயிகள் டூவீலர் பேரணி**

வேதாரண்யம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, வேதாரண்யம் அருகே தோப்புத்துறையில் இருந்து தானிக்கோட்டகம் வரையில் டூவீலர் பிரச்சார பணி நேற்று நடந்தது. இதில், விவசாய சங்க ஒன்றிய செயலாளர் செங்குட்டுவன் தலைமை வகித்தார். முன்னதாக, தோப்புத்துறையில் மார்க்.கம்யூ., டில்லிபாபு துவக்கி வைத்தார். 30க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். இப்பேரணியில், கோவில், அறக்கட்டளை, வக்ஃபு போர்டு, தேவாலய நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு பட்டா வழங்க வேண்டும். கோவில் குத்தகை பாக்கி மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை ரத்து செய்ய வேண்டும். இதற்கு, தேவையான சட்ட திருத்தத்தை தமிழக அரசு கொண்டு வர வேண்டும் என்பது உள்பட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தினர்.
நாகை மாவட்டத்தில், வேதாரண்யம், கீழ் வேளூர், திருக்குவளை, மயிலாடுதுறை பகுதிகளில் டூவீலர் பிரச்சாரம் நடந்தது.

<u>வறட்சியால் தென்னை விவசாயிகள் பாதிப்பு: ஊக்குவிக்க பயிற்சி</u>

திண்டுக்கல்:வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நடவிலிருந்து அறுவடை வரையிலான புதிய தொழில்நுட்பம், இலவச பயிற்சி மற்றும் கருவியை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் வழங்கி வருகிறது.கடந்த இரண்டு ஆண்டுகளாக நீடித்த வறட்சியினால், ஏராளமான தென்னை மரங்கள் கருகின. பற்றாக்குறை காரணமாக தேங்காய் விலை அதிகரித்துள்ளது. தென்னையினால் அடுத்த சில ஆண்டுகள் வரை வருவாய் ஈட்ட முடியாததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.
இவர்களை ஊக்குவிப்பதற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து வேளாண் தொடர்பான சேவைகளை வழங்கி வரும் எம்.எஸ். சுவாமிநாதனின் கிராம வள மையங்களின் மூலமாக இலவச கருவி மற்றும் நடவிலிருந்து அறுவடை வரையிலான புதிய தொழில் நுட்பங்களை கற்றுகொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
தென்னையில் ஏறுவதற்காக ரூ. 3 ஆயிரம் மதிப்பிலான கருவி, பயிற்சியில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவ காப்பீடு திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.மையத்தில் பணியாற்றும் களப்பணியாளர்கள், கிராமங்களுக்கு சென்று விவசாயிகளின் பெயர் மற்றும் தகவல்களை பதிவு செய்து பயிற்சிக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர்.

**மர்மநோயால் மாடு இறப்பு**

பழநி:பாலசமுத்திரத்தில் மர்மநோய் தாக்கி மாடு ஒன்று இறந்துள்ளதால், கால்நடை வளர்ப்பவர்கள் அச்சமடைந்து உள்ளனர்.பாலசமுத்திரம் உச்சிகாளியம்மன் வீதியைச் சேர்ந்த தங்கதளம் என்பவரது மாடு இறந்துள்ளது.
இதன்காரணமாக, அப்பகுதியில் கால்நடைகள் வளர்ப்பவர்கள், கோமாரி நோயாக இருக்குமோ என அச்சமடைந்துள்ளனர். கால்நடை உதவி மருத்துவர் நளினி கூறுகையில், ""வயிற்றுபுண், மூச்சடைப்பால் மாடு இறந்துள்ளது, கோமாரி நோய்க்கு தடுப்பூசி அனைத்து கால்நடைகளுக்கு இடப்பட்டுள்ளது. கோமாரிநோய் பாதிப்பு இந்தப்பகுதியில் இல்லை," என்றார்.

<u>கோமாரி நோய் சிகிச்சைக்கு மருத்துவ குழு கால்நடையை காப்பாற்ற நடவடிக்கை</u>

சிவகங்கை: கோமாரி நோயால் மாடுகள் இறப்பை தடுக்க, சிகிச்சை அளிக்க,மருத்துவ குழு அமைக்க வேண்டும், என கோரிக்கை எழுந்துள்ளது. மாவட்டத்தில்,பசு, எருமை மாடுகள் என, 2 லட்சத்து 35 ஆயிரத்து 748, செம்மறி, வெள்ளாடுகள் 4.60 லட்சம்,கோழிகள் 7.20 லட்சம், வளர்க்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இதில், 25 ஆயிரம் லிட்டர் ஆவின் கொள்முதல் செய்கிறது. கடந்த சில நாட்களாக மாடுகளுக்கு கோமாரி நோய் மற்றும் ஆடு,கோழிகளுக்கு கழிச்சல் நோய் ஏற்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் கணக்குபடி, கோமாரி நோயால், 17 மாடுகள் இறந்துள்ளன. ஏராளமான மாடுகள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.
சிகிச்சை: கோமாரி நோய் தாக்கிய, மாடுகளுக்கு கால்நடைத்துறையினர் சிகிச்சை அளித்து வருகின்றனர். இருப்பினும், கிராமப்புறங்களில் உள்ள துணை கால்நடை மருத்துவமனைகள் 30க்கும் மேற்பட்டவைகளில்,டாக்டர்கள், கால்நடை ஆய்வாளர்கள் இல்லை. நோய் பாதிப்பிற்குள்ளாகும் மாடுகளுக்கு உரிய சிகிச்சை கிடைக்கவில்லை.
இது போன்று, கிராமப்புறங்களில் கோமாரி, கழிச்சல் நோயால் ஆடு, மாடுகள் இறப்பை தடுக்க, மாவட்டத்தில் தாலுகாவிற்கு ஒரு, கால்நடை டாக்டர்களை கொண்ட, தனிப்படை அமைக்க வேண்டும். கால்நடை வளர்ப்போர் தரும் புகாரை பெற்று, உடனடியாக சிகிச்சை அளிக்க, இந்த தனிப்படையினரை பயன்படுத்த வேண்டும், என, கால்நடை வளர்ப்போர், கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் தண்டியப்பன் கூறியதாவது: கோமாரி,கழிச்சல் நோயால் சிவகங்கை, திருப்புவனம் தாலுகாவில், 10க்கும் மேற்பட்ட மாடுகள்,20க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்துள்ளன. இதனால், பால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.இதை தவிர்க்க, சிறப்பு தனிப்படை குழுவினர்,தொடர் சிகிச்சையில் ஈடுபடுத்த வேண்டும், என, கலெக்டரிடம் கோரிக்கை வைத்துள்ளோம், என்றார்.

**மரம் நடுவிழா**

புளியங்குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில், காரைக்குடி சிட்டி லயன்ஸ் சங்கம் சார்பில் மரக்கன்று நடும் விழா நடந்தது. தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். வட்டார தலைவர் பாதம்பிரியான், மாவட்ட தலைவர் சீனிவாசன், செயலாளர் அருணாசலம், பொருளாளர் ராமு, ராஜா அலெக்ஸ்சாண்டோ பங்கேற்றனர். தலைமை ஆசிரியர் சண்முகவேல் நன்றி கூறினார்.

**காட்டு பன்றி, மான்களால் கரும்பு, கத்திரி செடி நாசம் விரக்தியில் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே சிங்கம்மாள்புரத்தில், விளைநிலங்களில் காட்டுப்பன்றி, மான்கள் புகுந்து, சேதத்தை விளைவித்து வருவதால், விவசாயிகள் திண்டாடி வருகின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகதோப்பு வனப்பகுதியை யொட்டிய விளைநிலங்களில், அடிக்கடி விலங்குகள், உணவு, தண்ணீருக்காக வனத்தை விட்டு வெளியேறி, சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

விவசாயிகளும் வன விலங்குகள் வராதாவறு இருக்க, வனத்துறை சார்பில் வழங்கப்பட்ட பட்டாசுகளை கொளுத்தி போட்டும், எவ்வித பயமுமின்றி, தொடர்ந்து பயிர்களை சேதப்படுத்தி வருகிறது.

இதனால், விவசாயிகள் கடுமையான இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் சிங்கம்மாள் புரத்தில், விவசாயி ராமராஜின் கரும்பு தோட்டத்திற்குள் புகுந்த காட்டு பன்றிகள், கரும்பை வேறோடு சாய்த்து, அங்கேயே குட்டிகளை போட்டு, ஒரு ஏக்கர் பரப்பில் சேதத்தை விளைவித்துள்ளது.

இவரின் கத்திரி செடிகளையும், மான்கள் அதிகளவில் நாசம் செய்துள்ளது. இதனால் கடும் நஷ்டத்திற்குள்ளாகி உள்ளார்.
ராமராஜ்,"" தண்ணீர் தட்டுப்பாடான இந்நேரத்தில், கஷ்டப்பட்டு, எட்டு மாதமாக வளர்த்த கரும்புகளை, பன்றி கூட்டம் வேரோடு சாய்த்து வருகிறது. கடுமையான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கத்திரி செடிகளையும், மான்கள் அதிகளவில் நாசம் செய்து வருகிறது. எந்த விவசாயமும் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன்," என்றார்.

**நோய் தாக்கிய மாடுகளுக்கு சிகிச்சை**

காரியாபட்டி: காரியாபட்டி பகுதியில்,நோய் தாக்கிய மாடுகளுக்கு,கால்நடை டாக்டர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது.
காரியாபட்டி பகுதி சக்கரகோட்டை, விட்டிலாரேந்தல், சத்திரம்புளியங்குளம், துலுக்கன்குளம் உள்ளிட்ட கிராமங்களில், அதிக அளவில் மாடுகள், ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. மாடுகளை கோமாரி நோய் தாக்கியதில், ஒரு வாரத்திற்குள், பத்துக்கு மேற்பட்ட மாடுகளோடு, இளம்கன்றுகளும் பலியாகின. இந்நோய் வேகமாக பரவி வருவதால், மேலும் பல மாடுகள் பலியாகலாம் என, கால்நடை வளர்ப்பவர்கள் பீதியடைந்தனர். இது தொடர்பான செய்தி, "தினமலர்' நாளிதழில், நேற்று முன் தினம் வெளியானது.
இதை தொடர்ந்து, கால்நடை மருத்துவ உதவி இயக்குனர் மோகன், நோய் புலனாய்வு உதவி இயக்குனர் பார்த்தசாரதி மல்லையா, மண்டல இணை இயக்குனர் வரதநாராயணன், டாக்டர்கள் ராஜ்குமார்,மோகன்குமார், முருகன் மருத்துவ குழுவினர் ஆய்வு செய்து, சிகிச்சை அளித்தனர்.
அவர்கள் கூறுகையில்,"பருவ நிலை மாற்றத்தால் வரக்கூடிய காய்ச்சல்தான்.ஆரம்பத்திலே சிகிச்சை எடுத்துக் கொண்டு, 6 மாதத்திற்கு ஒரு முறை தடுப்பு ஊசி போட்டால், மாடுகளை நோய் தாக்காது.
கால்நடை வளர்ப்பவர்களும் ஒத்துழைக்க வேண்டும்,' என்றனர்.

**மா விவசாயத்திற்கு மாறும் தென்னை விவசாயிகள்**

ராஜபாளையம்: ராஜபாளையம் சுற்றுபகுதிகளில், மூன்று ஆண்டுகளாக போதியமழை பெய்யாததால், தென்னை விவசாயத்தில் பின்னடைவு ஏற்பட்டு உள்ளது. இதனால்,இந்த விவசாயிகள், மா விவசாயத்திற்கு மாறுகின்றனர். மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில், மதுரை கல்லுபட்டி முதல் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், தேவதானம் வரை, தென்னை விவசாயம் நடக்கிறது. இங்கு விளையும் தேங்காய்கள், குஜராத், மகாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளுக்கு செல்கிறது. ராஜபாளையம் பகுதி நெட்டை வகை மரங்களில், சிறிய காய்கள் கிடைத்ததால், 108 தேங்காய் உடைப்பு போன்ற நேர்த்திக்கடன் செலுத்த, வடமாநில பக்தர்களுக்கு, இந்த காய்கள் பயன்பட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளாக ,வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், தேவதானம் பகுதிகளில், போதியமழை பெய்யவில்லை. தென்னை மரங்கள் பட்டுபோகும் நிலையில் உள்ளன. போதிய தண்ணீர் கிடைக்காததால், காய்த்த தேங்காய்கள் மேலும் சிறுத்து, காய்களின் எண்ணிக்கையும் பலமடங்கு குறைந்தது. சுறுசுறுப்பாக இயங்கும், ராஜபாளையம் தேங்காய் பேட்டை, தற்போது வெறிச்சோடி கிடக்கிறது. காய் பறிப்புக்கு, கூலி கொடுக்க கூட விவசாயிகள் திணறுகின்றனர்.

விவசாயி சுப்பிரமணியம், ""ராஜபாளையம், சேத்தூர், மம்சாபுரம், தேவதானம் பகுதிகளில் மாதத்திற்கு நான்கு லட்சம் தேங்காய்கள் விற்பனைக்கு செல்லும். தற்போது, 10 ஆயிரம் காய்கள் கிடைப்பதே அரிதாக உள்ளது.

மழை இன்மையால், விளைச்சல் பாதித்து உள்ளது. கிணற்று பாசனமும் இந்த ஆண்டு கைகொடுக்கவில்லை. தென்னை வளர்த்தால், தரமான காய்களுக்கு 25 ஆண்டுகள் காத்திருக்கவேண்டும். 40 முதல் 60 ஆண்டுகள் வரை காய்ப்பு இருக்கும். தற்போது, தண்ணீரின்றி தென்னை மரங்கள் பட்டு போகின்றன. கஷ்டமான சூழலில், தென்னை அருகே மா மரக்கன்றுகளை நட்டு வருகிறோம். மா சீசனுக்கு வரும் வருமானத்தை நம்பி உள்ளோம். பாதிப்பான தென்னைகளுக்கு நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை,'' என்றார்.

தேங்காய் பேட்டை உரிமையாளர் அன்னம ராஜா, ""ராஜபாளையம் தேங்காய், பல

நாட்கள் வீணாகாமல் இருக்கும் என்பதால், வட மாநிலத்தவர்கள் விரும்பி வாங்கினர். தற்போது, காய் விளைச்சல் இல்லை, அதேவேளை, மண் வளம், நீர் வளம் இருப்பதால், ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து, வடமாநிலங்களுக்கு தேங்காய்கள் செல்கின்றன," என்றார்.

தென்னை விவசாயம் முற்றிலும் அழிந்து போகாமல் இருக்க, ஆழ்துளை குழாய் , சொட்டு நீர் பாசனம் செய்ய ,50 சதவீத மானியத்துடன் விவசாயிகளுக்கு, அரசு கடன் வழங்கவேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ,நிவாரமும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

**போதிய மழை பெய்யாததால் விவசாயிகள் டிராக்டரில் தண்ணீரை கொண்டு பாய்ச்சும் அவலம் அரசு நிவாரணம் கிடைக்குமா..விவசாயிகள் ஏக்கம்**

கோவில்பட்டி கோவில்பட்டி பகுதியில் மழை ஏமாற்றியதால் விவசாயம் பொய்த்துப்போனது. பயிர்களுக்கு தேவையான சராசரி மழையில்லாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மழையை நம்பி இரண்டுமுறை விதைத்த விவசாயிகள் டிராக்டரில் தண்ணீர் கொண்டு சென்று பயிர்களை வளர்க்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே மாநிலம் முழுவதும் மழை பொய்த்துப்போவது அல்லது தேவையானபோது இல்லாமல் தேவையற்ற நேரத்தில் அதிகமாக பெய்து பயிர்களை நாசமாக்குவது என விவசாய தொழிலுக்கு முற்றிலும் முரண்பாடான நிலை உள்ளது. கடந்த ஆண்டில் மழை முற்றிலும் பொய்த்துப்போனதால் டெல்டா மற்றும் மானாவாரி விவசாய தொழில் நஷ்டத்தை வைத்து சில மாதங்கள் அரசியல் நடத்தி நிவாரணம் வழங்கும் அளவிற்கு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.
இந்தாண்டு விவசாயம்
பொதுவாக தமிழக விவசாயத்திற்கு ஆடிப்பட்டமே மிகவும் பொருத்தமானதாக இருந்து வந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் பட்டம் தேடிவிதைத்த ஆடி மாசமும், தவறிப்போனால் கைகொடுத்து வந்த ஆவணி மாச பட்டமும் பயனற்றுப்போக, ஒருவழியாக புராட்டாசி மாச பட்டமாவது நிலைக்குமென விவசாயிகள் நம்பினர். மாறாக புரட்டாசி பட்டமும் விவசாயிகளை புரட்டியெடுத்துவிட்டு காணாமல் போய்விட்டது. அதிலும் குறிப்பாக தூத்துக்குடி மாவட்டம்
கோவில்பட்டி பகுதியை விவசாயத்
தொழில் உண்டுயில்லையென ஒருகை பார்த்து விட்டது. எந்தப்பட்டமும் கைகொடுக்காமல் மழை ஏமாற்றியதால் விதைத்த விதைகளைப்போல்

விவசாயிகளின் நெஞ்சமும் கருகியது. இதற்கெல்லாம் சற்றும் சளைக்காமல் மிகுந்த நம்பிக்கையுடன் கோவில்பட்டி பகுதி விவசாயிகள் ஒவ்வொரு பட்டத்திற்கும் ஒவ்வொரு முறை மீண்டும் மீண்டும் விதைத்தனர்.

பருவமழை ஏமாற்றம்

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே மழையின் அளவு குறைந்து வந்தாலும் சுமார் மூன்று ஆண்டுகளில் இருக்கின்ற நீராதாரங்கள் அனைத்தும் முற்றிலும் வற்றி வறண்டு போகும் அளவிற்கு மழை ஏமாற்றி விட்டது.கோவில்பட்டி கோட்டத்தில் எட்டயபுரம் தாலுகாவிலுள்ள சுமார் 56 வருவாய் கிராமங்களில் 10க்கும் குறைவான கிராமங்கள், விளாத்திகுளம் தாலுகாவிலுள்ள 86 கிராமங்களில் 13க்கும் குறைவான கிராமங்கள், கோவில்பட்டி தாலுகாவிலுள்ள 56க்கு 5க்கும் குறைவான கிராமங்கள், புதூர் யூனியனில் சில கிராமங்கள் என ஒருசில பகுதிகளில் மட்டும் விவசாயத்திற்கு மழை பெய்துள்ளது. ஆனால் விவசாயம் நடைபெற்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மழையில்லாமல் பயிர்கள் தளைக்க வழியின்றி விவசாயிகளைப்போல் வாடிப்போயுள்ளது. ஏனெனில் விவசாயம் நடைபெறும் கிராமங்களில்
தேவையான நேரத்தில், தேவையான அளவிற்கு சராசரியாக மழை பெய்யாமல் கிராமத்தில் சொல்லப்படும் பழமொழியான மாமியார் இறந்தால் மருமகள் அழுவதுபோல என்பதைப்போல் ஏதோ மழை பெய்தது என்ற கணக்கில் பொழிந்துவிட்டு காணாமல் போய்விட்டது.

நம்பிக்கையும், முயற்சியும்

கோவில்பட்டி பகுதியில் போதிய மழையில்லாததால் இரண்டுக்கும் மேற்பட்ட முறை விதைத்த நிலத்தில் தற்போது பயிர்கள் தலைகாட்டியுள்ளன. ஆனால் மழையில்லாததாலும், இனிமேல் பெய்தாலும் பிரயோஜனம் இல்லாததாலும் அடுத்துவரும் சில நாட்களில் முளைத்த பயிர்கள் வீணாக அழிவதை பார்க்க விவசாயிகள் தயாராகயில்லை. இதனால் தங்களது குழந்தைகளை போல் முளைத்த பயிர்களை கருதி எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற முயற்சியில் இறங்கியுள்ளனர். தற்போது பருவநிலை புயல் மையம் கொண்டுள்ளது, கரையை கடந்து விட்டது, தமிழகத்தில் கனமழை வரும், வலுவிழந்த புயலால் தமிழகம் தப்பித்தது என்று மாறிமாறி அறிவிப்புகள் வருவதால் இயற்கையின் மீதுள்ள நம்பிக்கையை கொஞ்ச நாட்களுக்கு ஒத்திவைப்பது என்ற முடிவிற்கு விவசாயிகள் வந்துள்ளனர். இதன் வெளிப்பாடாக கடந்த சில நாட்களாக
கோவில்பட்டி பகுதி விவசாயிகள் தங்களது பயிர்களை காப்பாற்ற டிராக்டர், லோடு ஆட்டோக்களில் தங்களது தேவைக்கேற்ப டிரம்களில் தண்ணீரை கொண்டு

சென்று ஊற்றி வருகின்றனர். முன்பெல்லாம் நிலத்தை உழுது பண்படுத்துவது, அடியுரம், மேலுரம், விதைப்பு, களையெடுப்பு போன்ற பணிகளுக்குத்தான் விவசாய தொழிலாளர்கள் தேவைப்படுவர்.

இந்நிலை முற்றிலும் மாறிவிட்டதால் தண்ணீர் சுமக்கும் தொழிலாளர்களுக்கு கடும்கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஏனெனில் களையெடுப்பது கூட ஒருநாளைக்கு குறிப்பிட்ட அளவிற்கு களை எடுத்துவிட்டு கூலியை பெற்றுக் கொள்ள முடியும் அல்லது இன்று என் நிலம், நாளை உன் நிலம் என்ற பரிமாற்ற முறையில் வேலையை முடித்து விடலாம். ஆனால் மழை பெய்வதற்கு பதிலாக கொண்டு சென்ற தண்ணீரை பயிர்களின் மீது பாதிப்பில்லாமல் ஏக்கர் கணக்கில் ஊற்ற வேண்டுமெனில் தனிசாமர்த்தியம் வேண்டுமென விவசாயிகள் கூறுகின்றனர். அதே நேரத்தில் இந்த முயற்சியும் தங்களது பயிர்களை காப்பாற்ற முடியுமென்ற நம்பிக்கையில் தான் மேற்கொண்டு வருவதாக ஆதங்கப்படுகின்றனர்.

அரசு நடவடிக்கை

கடந்தாண்டு தமிழகத்தின் 32 மாவட்டங்களில் சென்னை நீங்கலாக 9 டெல்டா மாவட்டங்கள் உட்பட சுமார் 16 ஆயிரத்து 700 பஞ்சாயத்துகளில் மேற்கொள்ளப்பட்ட விவசாயத்தில் முற்றிலும் நஷ்டம் ஏற்பட்டதால் வறட்சி பாதித்த பகுதிகளாக அரசு அறிவித்தது. இதற்காக சுமார் ரூ.1376 கோடியை ஒதுக்கிய நிலையில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு 103 கோடி மட்டும் கிடைத்ததாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. இந்நிதியை டெல்டா விவசாயிகள், மானாவாரி விவசாயிகள் என்ற பாகுபாட்டுடன் அரசு வழங்கினாலும் யானைப்பசிக்கு சோளப்பொறி கொடுத்த கதையாகத்தான் இருந்தது. இந்நிலையில் 2012-13ம் ஆண்டில் பயிர்காப்பீடு செய்த விவசாயிகள் இன்சூரன்ஸ் நிறுவனங்களிடம் காப்பீட்டுத்தொகை கேட்கும்போது தெரிவித்த காரணம் தான் அதிர்ச்சியளிப்பதாக உள்ளதென்கின்றனர். ஏனெனில் மத்திய அரசின் சார்பில் பயிர்காப்பீட்டு தொகையாக சுமார் ரூ.740 கோடி கேட்டு ஆவணங்கள் அனுப்பப்பட்டு இருந்தாலும், மாநில அரசின் சார்பில் தரவேண்டிய பங்குத்தொகையான ரூ.303 கோடி இதுவரை தரவில்லையென கூறப்படுகிறது.

மேலும் அரசுகளின் நிதிசம்பந்தமான பிரச்னைகள் தீர்ந்த பின்னரே பயிர்க்காப்பீடு கிடைக்குமென அதிகாரிகள் காரணம் கூறியதை விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் கடந்தாண்டு மாநில அரசு அளித்த வறட்சி நிவாரணத்தொகையுடன் சேர்ந்ததுதான் காப்பீட்டுத்தொகை என்று கூடுதல்

தகவலையும் தெரிவித்ததால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். இதனால் கடந்தாண்டு நிவாரணம் வழங்கிய அரசு இந்தாண்டு என்ன செய்யப்போகிறது, காப்பாற்றுமா அல்லது மழைபோல போக்குக்காட்டுமா என்ற கேள்விகளுடன் காத்திருக்கின்றனர்.உடனடித் தீர்வு தற்போது அரசின் சார்பில் பயிர் கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்தாண்டு விவசாயம் செய்யாமலேயே நிவாரண நிதியை மட்டும் ஏராளமானோர் பெற்றுக் கொண்டனர். இந்தாண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு லேப்டாப், ஆன்லைன் வசதி போன்ற நவீன முறைகளை கொண்டு பயிர் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொண்டு வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். ஆகவே உண்மையிலேயே நிலங்களில் விவசாயம் செய்த விவசாயிகளை வைத்து கணக்கெடுப்பு பணிகள் நடைபெற வேண்டுமென விரும்புகின்றனர். மேலும் அரசின் வேளாண்மைத்துறையில் சார்பில் விவசாயம் சம்பந்தமாக எந்தவொரு பொருள் வாங்கினாலும் அதற்கான பில்களை கடைகளில் பெற வேண்டுமென அறிவுருத்துகிறது. ஆனால் விதை, உரம் விற்பனை கடை உட்பட விவசாய பொருட்கள் விற்கும் எந்தவொரு கடைகளிலும் அதற்கான பில்கள் தரப்படுவதில்லை என்றும், பில் கேட்போரிடம் கூடுதல் விலையை கூறி சமாளிப்பதாகவும் அனுபவம் கொண்ட விவசாயிகள் கூறுகின்றனர். கோவில்பட்டி பகுதியில் பிரபல கடையில் பிரபல கம்பெனி தயாரிப்பான விதைகளை வாங்கி பயிரிட்ட விவசாயிகள் ஆறுநாட்களில் முளைக்க வேண்டிய விதைகள் ஆறுவாரங்கள் ஆகியும் முளைக்க வில்லையென குற்றம்சாட்டி தயாரிப்பு நிறுவனத்தினடம் நிவாரணம் பெற்றுத்தரக்கோரி கோவில்பட்டி சப்கலெக்டரிடம் முறையிட்டதையே இதற்கு உதாரணமாக கூறுகின்றனர். ஆகவே பயிர் கணக்கெடுப்பு பணிகளில் சம்பந்தப்பட்ட விவசாயிகளை உடன் வைத்து கணக்கெடுத்து ஆன்லைனில் பதிவு செய்யவும், உண்மையாக விவசாயம் செய்வோரின் அடையாளங்களை உறுதிப்படுத்தவும் வேண்டும். மேலும் வறட்சி நிவாரணம் வழங்கும்போது விதை மற்றும் உரம் உட்பட விவசாய பொருட்கள் வாங்கியதற்கான பில் போன்ற ஆவணங்களை சமர்ப்பிக்கவும், விவசாயிகளுக்கு பில் தரமறுக்கும் கடைகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தீராத கோமாரி நோய் கவலையில் விவசாயிகள்**

கச்சிராயபாளையம் :கச்சிராயபாளையம் பகுதிகளில் கால்நடைகளின் கோமாரி நோய் பாதிப்பு தொடர்வதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.கச்சிராயபாளையம் பகுதி கிராமங்களில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. சமீப காலமாக கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கின்றன. கால்நடைக்கு தடுப்பூசி போட்டு செல்லும் கால்நடைத் துறையினர் அதன் பிறகு கண்டுகொள்வதில்லை. இதனால் விவசாயிகள் தனியார் கால்நடை மருத்துவர்களை அழைத்து தங்கள் கால்நடைகளுக்கு பணம் கொடுத்து சிகிச்சை அளிக்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கின்றனர். அரசு கால்நடை மருத்துவ மனைகள் இருந்தும் பணம் கொடுத்து சிகிச்சையளிக்க வேண்டிய நிலை உள்ளது. கோமாரி தடுப்பூசி போட்ட பிறகும் அனைத்து கிராமங்களிலும் கால்நடை துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட கலெக்டர் சம்பத் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அமராவதி உபரிநீரை தாதம்பாளையம் குளத்திற்கு கொண்டுவர வலியுறுத்தல்**

கரூர்: "அமராவதி உபரிநீரை க.பரமத்தியில் உள்ள தாதம்பாளையம் குளத்திற்கு கொண்டுவர வேண்டும்' என, ஆலோசனைக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

அமராவதி வெள்ள உபரிநீரை தாதம்பாளையம் குளத்திற்கு கொண்டுவருவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நேற்று கரூர் மாவட்டம் பள்ளபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்தது.

இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து விவசாயி ராமசாமி பேசியதாவது:

கரூர் மாவட்டத்தின் அமராவதி ஆற்றின் மேற்கு பகுதியான க.பரமத்தி யூனியன் மிகுந்த வறட்சி பகுதியாகவே உள்ளது. கடந்த, 1878ம் ஆண்டு அணைப்பாளையத்தில் இருந்து பள்ளபாளையம் ராசவாய்க்காலை ஒட்டி ஆரியூர் பகுதியில் இருந்தும் பரமத்தி பகுதியில் இருந்தும் வருகின்ற உப்பாறு என்ற நீர் ஓடைகள் வெள்ளகாலங்களில் தண்ணீர் பாய்ந்து வந்து ராசவாய்க்காலை அடிக்கடி உடைத்து சென்றிருக்கிறது.

இதனால் ஆங்கிலேயர்கள் வாய்க்காலுக்கு மேற்புறம் அதாவது தற்போதைய இடத்தில் குளத்தை வெட்டி நீரைத்தேக்கினர். இந்த குளம், 250 ஏக்கர் பரப்பளவு உடையது. மாவட்டத்தில், இரண்டாவது பெரிய குளமாக இருக்கிறது. எனவே அமராவதியின் வெள்ளக்காலங்களில் வரும் உபரிநீரை இக்குளத்திற்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமராவதி மழைக்கால வெள்ள உபரிநீரை தாதம்பாளையம் குளத்திற்கு கொண்டு வர விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், 2002ல் சர்வே செய்யப்பட்ட வழித்தடத்தில் தாதம்பாளையம் குளத்திற்கு மழைக்கால உபரிநீரை கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கரூர் மாவட்டத்தில் ஆறுகளில் மணல் அள்ளுவதை தடை செய்ய வேண்டும்.
அமராவதியில் தண்ணீர் திறந்துவிட்டால் கரூர் மாவட்டம் கடைமடை வரை தண்ணீர் வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பயிரிட்டும் நீரில்லாமல் காய்ந்த பயிர்களுக்கு, விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகையினை வழங்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்தில், அமராவதி ஆற்றுநதிநீர் பாசன சங்க தலைவர் லிங்கம் சின்னசாமி, பள்ளபாளையம் ராசவாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க தலைவர் ராஜாமணி பழனிச்சாமி, செயலாளர் ராமசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## கோமாரி நோயை ஒழிக்க திட்டம்

திண்டுக்கல்: தமிழகத்தில் கோமாரி நோய் பாதிப்பால், இதுவரை 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகி உள்ளன. ஆய்வில், கோமாரி நோய் பரவியதற்கு, தடுப்பூசி சரியாக போடப்படாததே காரணமாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும், தடுப்பூசி போடப்படும் மாடுகள் சரியாக பால் கறப்பதில்லை என்ற தவறான கண்ணோட்டத்தால், விவசாயிகள் மாடுகளுக்கு தடுப்பூசிபோட அனுமதிப்பதில்லை என்றும் தெரியவந்துள்ளது. விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடுவதுடன், 2014 க்குள் கோமாரி நோயை முற்றிலும் ஒழிக்க அரசு திட்டமிட்டுள்ளது. தவிர, தடுப்பூசியின் வீரியமும் அதிகரிக்கப்பட உள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், ஒவ்வொரு ஆண்டும் மார்ச், செப்டம்பரில் தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது. கோமாரி நோய்க்கான அடுத்த தடுப்பூசி முகாம், 2014 மார்ச்சில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில், ஊராட்சி தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், வார்டு உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து விடுதலின்றி அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட உள்ளது. மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதாக ஊராட்சி தலைவர் ஒப்புதல் பெற வேண்டுமெனவும் கால்நடைபராமரிப்புத்துறை அதிகாரிகளுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

அரிசி ஆலை தொழிலாளர் கூலி உயர்வு பேச்சுவார்த்தை தோல்வி

ஆத்தூர்: ஆத்தூரில், நெல் அரவை, அரிசி உற்பத்தி ஆலை கூலித் தொழிலாளர்கள் மற்றும் ஆலை உரிமையாளர்களுடன், நேற்று நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. அதனால், தொழிலாளர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.
ஆத்தூர், நரசிங்கபுரம் நகர் பகுதியில், 38 அரிசி உற்பத்தி மற்றும் நவீன அரிசி உற்பத்தி ஆலைகள் உள்ளன. இதில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூலித் தொழிலாள்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூலி உயர்வு ஒப்பந்தம் செய்யப்படும். இந்த ஆண்டு, 75 சதவீதம் கூலி உயர்வு வழங்கும்படி, ஆத்தூர் நகர அரிசி உற்பத்தி ஆலைத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில், கோரிக்கை விடுத்தனர்.
அதற்கு, அரிசி உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொள்ளாததால், நவம்பர், 1ம் தேதி முதல், கூலித் தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர். முதல் கட்ட பேச்சுவார்த்தையில், 25 சதவீதம் கூலி உயர்வு வழங்குவதாக, அரிசி உற்பத்தியாளர்கள் கூறினர். கூலித் தொழிலாளர்கள் ஏற்க மறுப்பு தெரிவித்து, தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.
ஆத்தூர் தாலுகா அரிசி உற்பத்தியாளர்கள் சங்க கட்டிடத்தில், அரிசி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ராதாகிருஷ்ணன், செயலாளர் பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில், நேற்று மாலை, கூலித் தொழிலாளர்கள் சங்க செயலாளர் கோவிந்தசாமி உள்ளிட்ட தொழிலாளர்களுடன், பேச்சுவார்த்தை நடந்தது.
இதில், ஆலை உரிமையாளர்கள் தரப்பில், 30 சதவீதம் கூலி உயர்வுக்கு ஒப்புக் கொண்ட போதும், கூலித் தொழிலாளர்கள் ஏற்க மறுத்து விட்டனர்.
பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால், தொடர்ந்து வேலை நிறுத்தம் நடக்கிறது.

<u>அன்னதான திட்ட கோவில்களில் காய்கறி தோட்டம் அமைக்க உத்தரவு</u>

திருப்பூர்: காய்கறி செலவை குறைக்கும் வகையில், அன்னதான திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து கோவில்களிலும், காய்கறி தோட்டம் அமைக்க அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 468 கோவில்களில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், அன்னதான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவில்களின் வருவாய், பக்தர்கள் வருகை கணக்கில் கொண்டு அன்னதானம் வழங்கப்படுகிறது. மளிகை மற்றும் காய்கறிகளின் விலை படமடங்கு உயர்ந்துள்ள நிலையில், ஒரு நபருக்கு 22 ரூபாய் வரை மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. காய்கறி செலவை குறைத்து, தரமான காய்கறிகளை பயன்படுத்தும் வகையில், ""அன்னதானம் நடக்கும் அனைத்து கோவில்களிலும் காய்கறி தோட்டம் கட்டாயம் அமைக்க வேண்டும் என, அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அறநிலைய துறை கமிஷனர் பிறப்பித்த உத்தரவு : அன்னதான திட்டம் நடக்கும் அனைத்து கோவில்களில் , சொந்த விவசாய நிலங்கள் இருந்தால், காய்கறி தோட்டம் அமைக்க வேண்டும்; சொந்த நிலம் இல்லாத கோவில்கள், அருகிலுள்ள கோவில்களிலிருந்து நிலம் பெற்று, காய்கறி மற்றும் வாழை பயிர் செய்ய வேண்டும். அருகருகே, கோவில்கள் இருந்தால், மூன்று கோவில்களை இணைத்து பெரிய அளவில் தோட்டம் அமைக்கலாம்; இரண்டு மாதத்திற்குள் தோட்டம் தயாராகும் வகையில், அனைத்து கோவில் செயல் அலுவலர்களும் முனைப்பு காட்ட வேண்டும். அன்னதான தோட்டத்தில் விளையும் காய்கறிகளை மட்டுமே இனிமேல் பயன்படுத்த வேண்டும்,". இவ்வாறு கமிஷனர் கூறியுள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இரண்டாம் போக நெல் நடவு பணியில் விவசாயிகள் தீவிரம்

கம்பம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இரண்டாம் போக நெல் நடவுப்பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் உர விலை அதிகரிப்பால் மிகவும் பரிதவித்து வருகின்றனர். கம்பம் பள்ளத் தாக்கு பகுதியான லோயர்கேம்ப் முதல் வீரபாண்டி வரை 14,707 ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கம்பம் ஏழரசு களம், ஊமையன் வாய்க்கால், அண்ணாபுரம், வீரப்ப நாயக்கன் குளம், சுருளிப்பட்டி ரோடு உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் முதல் போக நெல் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டு அறுவடைபணி முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும் இப்பகுதிகளில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக இரண்டாம் போக நெல் நடவுப்பணிக்காக நாற்று பாவியுள்ள நிலையில், தற்போது கடந்த சில தினங்களாக நடவுப்பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் உர விலை அதிகரிப்பின் காரணமாக விவசாயிகள் பெரிதும் சிரமம் அடைந்து வருகின்றனர். இதுகுறித்து விவசாயி நாகராஜ் கூறுகையில் நடவுப்பணியின்போது நெற்பயிருக்கு யூரியா மற்றும் பாக்டம்பாஸ் ஆகியவற்றை அடியுரமாக இடுவது மிகவும் அவசியமாகும். தற்போது பாக்டம்பாஸ் மூடை ரூ.900 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் யூரியா, டிஏபி உள்ளிட்ட உரங்களின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால் அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகள் குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது. இருந்த போதிலும் விவசாயிகள் வேறு வழியின்றி தொடர்ந்துவிவசாயத் தில் ஈடுபட்டு வருகிறோம் ஆகவே அரசு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்’ என்றார்.

விதைப்புல் மானியமாக ஏக்கருக்கு ரூ10 ஆயிரம்

வானூர், : புதுவை கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் ஒருங்கிணைந்த கூட்டமைப்பின் கூட்டம் வானூரில் நடந் தது. தலைவர் கணேசன் தலைமை தாங்கினார். வேலு வரவேற்றார். கடகம்பட்டு ஊராட்சி தலை வர் குப்பன் முன்னிலை வகித்தார். நிர்வாகிகள் பால்ராஜ், விநாயகபுரம் ஜெயராஜ், தியாகராஜன், கலியபெருமாள், சந்திரசேகரன், கோவிந்தன், ஏழுமலை, ஓட்டை ஊராட்சி தலைவர் சுந்தர், ஜோதி ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் புதுவை கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 2012-13ம் ஆண்டு வெட்டி அனுப்பிய கரும்புக்கு முத்தரப்பு கூட்டத்தை கூட்டி ரூ.3 ஆயிரம் வழங்கிட வேண்டும், விவசாயிகளிடம் பிடித்தம் செய்த தொகையை வட்டியுடன் உடனடியாக வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு சேரவேண்டிய தொகையை அவரவர் வங்கி கணக்கில் 15 நாளில் போடவேண்டும், ஆலை கழிவு கம்போஸ்ட் புதுவை விவசாயிகளுக்கு வழங்குவதுபோல் தமிழக விவசாயிகளுக்கும் வழங்கவேண்டும், விதைப்புல் மானியமாக ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும், ஆலையில் விவசாயிகள் கண்காணிப்புக்குழு அமைக்கவேண்டும், ஆலைக்கு 70 சதவீதம் சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகளை உடனடியாக வழங்க புதுவை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரங்கநாதபுரம் செந்தில் நன்றி கூறினார்.

**கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் அமைக்கும் திட்டம் கைவிட கோரி கவர்னரிடம் மனு**

ஈரோடு, : கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கத்தலைவர் நல்லசாமி நேற்று கவர்னர் ரோசய்யாவிடம் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழகம் மழை மறைவு மாநிலமாக உள்ளதால் பெரும்பாலும் தமிழகத்தில் சராசரிக்கும் குறைவாகவே மழை கிடைத்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் நீலகிரியில் பெய்யும் மழைநீர் பவானி ஆற்றில் வடிந்து, அணையில் தேங்கி, கீழ்பவானி பாசனத்துக்கு வளம் சேர்த்து வருகிறது. இப்பாசனம் 3

மாவட்டங்களிலும், 4 நாடாளுமன்ற தொகுதிகளிலும் உள்ளது. இயற்கை சூழலில் அமைந்துள்ள பவானிசாகர் அணைக்கு வரும் நீர் பாசனத்துக்கும், மழைநீர் அறுவடையிலும் மிக முக்கிய பங்கு வகித்து வருகிறது.
பவானிசாகர் அணையில் இருந்து செல்லக்கூடிய கீழ்பவானி பாசன வாய்க்காலில் கான்கிரீட் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற ரூ.1,210 கோடியை உலக வங்கியிடம் இருந்து கடன் பெற தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றினால் ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டி அதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடும் சூழல் உருவாகும். இதனால் பாசனப்பகுதியில் மழைப்பொழிவு குறையும். மரங்கள் வெட்டப்பட்டால் மழைப்பொழிவு மேலும் குறையும். உள்நோக்கத்துடன் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டம் குறித்து பொதுப்பணித்துறை பொறியாளர்களும், அரசு அதிகாரிகளும் தமிழக அரசுக்கு தவறான தகவல்களை கொடுத்து இத்திட்டதை செயல்படுத்த முயற்சிக்கின்றனர். தவறான வழிகாட்டுதல்களை அரசு ஏற்று செயல்படுத்தி விடக்கூடாது. இத்திட்டத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து நல்ல முடிவை தமிழக அரசு அறிவிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## மண்ணை கவ்வும் தென்னை விவசாயம்

கூடலூர், : அழிந்து வரும் தென்னை விவசாயத்தை காக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கம்பம் பள்ளத்தாக்கு தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தலைமுறைகள் கடந்தும் பலன் தரும் பணப்பயிரான தென்னை உலக அளவில் 93 நாடுகளில் பயிரிடப்படுகிறது. இதில் இந்தியாவின் பங்கு 23.44 சதவீதம். கேரளா, தமிழகம், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் தென்னை விவசாயம் அதிக அளவில் நடைபெறுகிறது. தமிழகத்தில் கோவை, தஞ்சை, தர்மபுரி, வேலூர், கன்னியாகுமரி, நெல்லை திண்டுக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் 3.90 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.
தேனி மாவட்டத்தில் கூடலூர், கம்பம், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, உத்தமபாளையம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடந்து

வருகிறது. லாபம் தரும் தொழிலாக இருந்த காலம் போய் பருவமழை பெய்யாதது, வேர்வாடல் நோய் தாக்குதலால் தென்னை விவசாயம் வீழ்ச்சியை நோக்கி அடி எடுத்து வைத்துள்ளது. மேலும் தமிழகத்தின் பல மாவட்டங்களில் தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு குடியிருப்பு மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

கடந்த சிலஆண்டுகளாக கம்பம், கூடலூர், ஆங்கூர்பாளையம், காமயகவுண்டன்பட்டி பகுதிகளில் உள்ள தென்னை மரங்களை வாடல் நோய் எனும் ஒருவகை பூஞ்சாண நோய் தாக்கி வருகிறது. குறிப்பாக 20 முதல் 25 ஆண்டுகளுக்கு மேலான மரங்களை மட்டுமே இந்நோய் தாக்குகிறது. நோய் தாக்கிய மரங்களிலுள்ள மட்டைகள் அடிப்பகுதி பழுத்து சோகைகள் மஞ்சள் நிறமாவதுடன் மகசூல் படிப்படியாக குறைந்து மொட்டை மரமாகிறது. இந்த மரங்களை உயிர்ப்பித்து மீண்டும் மகசூல் பெறமுடியாது என்பதால், நோய் தாக்கிய மரங்களை விவசாயிகள் வெட்டி அழித்து வருகின்றனர்.

தென்னை விவசாயிகள் கூறுகையில், 'தென்னை மேம்பாட்டு வாரியம் மற்றும் தோட்டக்கலைத்துறை வாயிலாக வழங்கப்படும் மானியங்கள் தென்னை விவசாயிகளுக்கு முறையாக சென்றடைய வழி செய்திட வேண்டும். புதிய ரகங்களை தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் விநியோகம் செய்ய வேண்டும். இலவச மண் பரிசோதனை செய்து மண்ணின் தரத்திற்கேற்ப உரம் பரிந்துரை செய்யவேண்டும். உரத்தினை மத்திய, மாநில அரசுகள் மானியமாகவோ, இலவசமாகவோ வழங்கவேண்டும். தமிழகத்தில் தென்னை நல வாரியம் உருவாக்கப்படுதல் வேண்டும். இவைகளால் மட்டுமே அழிந்து வரும் தென்னை விவசாயத்தை காக்கமுடியும்' என்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய 15–ந் தேதி கடைசி நாள் அதிகாரி அறிவிப்பு**



நீடாமங்கலம்,

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் வருகிற 15–ந் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என்று அதிகாரி கூறியுள்ளார்.இது குறித்து நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பயிர்க்காப்பீடு

தேசிய வேளாண்மை காப்பீட்டு நிறுவனம் தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் 21 பயிர்களுக்கு காப்பீடு செய்து கொள்ள அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி நடப்பு ஆண்டு சம்பா, தாளடி நெல் பயிர்களை விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம். வங்கிகளில் கடன் பெறும் அனைத்து விவசாயிகளும் காப்பீடு

செய்து கொள்ள கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதில் கடன் பெறாத இதர விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

கடன் பெறும், சிறு, குறு, பெரிய விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தை பிரீமியமாக அரசு வழங்குகிறது. கடன் பெறாத விவசாயிகளில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பிரீமியத்தில் 55 சதவீதம் மானியமாகவும், பெரிய விவசாயிகளுக்கு பிரீமியத்தில் 50 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது.

<u>கடைசி நாள்</u>

சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்களுக்கு ரூ.12 ஆயிரத்து 944 பயிர் காப்பீடு செய்ய 2 சதவீதம் பிரீமியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மொத்த பிரீமிய தொகை ரூ. 259 ஆகும். இதில் கடன் பெறும் சிறு, குறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் ரூ. 116 செலுத்த வேண்டும். விவசாயிகள் விரும்பினால் 150 சதவீதம் வரை காப்பீடு செய்யலாம்.

கூடுதல் காப்பீடு செய்ய ரூ.11 ஆயிரத்து 328–ல் 16 சதவீதத்தை பிரீமியமாக செலுத்த வேண்டும். இதில் மானியம் நீங்கலாக கடன் பெறும் சிறு, குறு, பெரிய விவசாயிகள் ரூ.906 செலுத்த வேண்டும். கடன்பெறாத சிறு, குறு விவசாயிகள் ரூ.816 செலுத்த வேண்டும். எனவே விவசாயிகள் உடனடியாக தங்கள் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விண்ணபத்தை பூர்த்தி செய்து, பிரீமியத் தொகையை செலுத்தி காப்பீடு செய்து கொள்ள வேண்டும். இதற்கான கடைசி நாள் வருகிற 15–ந் தேதி ஆகும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தொழில், விவசாய கடன் ரூ.9 லட்சம் வழங்கப்பட்டது**



சேத்துப்பட்டு,

பெரணமல்லூர் ஒன்றியம் மோட்சவாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கூட்டம் நடந்தது. சங்க தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். சங்க செயலாளர் நரசிம்மன் வரவேற்றார். மணி, சிவக்குமார், துரைக்கண்ணு, முருகன், எம்.முருகன், ராணி, கிருஷ்ணவேணி, சாந்தி, ரத் தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். 4 மாற்றுத் திற னாளிகளை தேர்வு செய்து தலா ரூ.25 ஆயிரம் கடன் வழங்கவும், ரேஷன் கடைக ளுக்கு புதிய வர்ணம் பூசி அழ குப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும் கோழிப்பண்ணை வைக்க ரூ.6 லட்சமும், பயிர்க் கடன் ரூ.3 லட்சமும் மொத்தம் ரூ.9 லட்சம் கடன் உதவி வழங் கப்பட்டது. ஏற்காடு தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்றதற்கு முதல்&அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. முடிவில் கோவிந்தன் நன்றி கூறினார்.

**திருவொற்றியூர், எண்ணூரில் தொடரும் கடல்சீற்றம்: கடல்நீர் ஊருக்குள் புகுந்ததால் வீடுகள் சேதம் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை**



சென்னை

திருவொற்றியூர், எண்ணூரில் கடல் சீற்றம் காரணமாக கடல்நீர் ஊருக்குள் புகுந்தது. இதில் 5 வீடுகள் சேதம் அடைந்தன. கடல்சீற்றம் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

ஊருக்குள் புகுந்த கடல்நீர்

புயல் சின்னம் காரணமாக திருவொற்றியூர், எண்ணூர் பகுதியில் கடந்த சில நாட்களாக கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. கடலில் தோன்றிய ராட்சத அலைகள் கடல் அரிப்பை தடுக்க போடப்பட்டிருந்த கடல் அரிப்பு தடுப்புச்சுவரை தாண்டி வந்தன. இதனால் கடற்கரையோரத்தில் கட்டப்பட்டிருந்த 10–க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் கடல்நீர் புகுந்தது.

அப்பர் நகரைச் சேர்ந்த சுரேஷ், அப்பர்சாமி கோவில் தெருவில் கமலா, ரவி, அருள், கலைவாணன் ஆகிய 5 மீனவர்களின் வீடுகளை ராட்சத அலைகள் கடலுக்குள் இழுத்து சென்றது.இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த தேசம் என்பவர் கூறுகையில், நாங்கள் தினமும் உயிரை கையில் பிடித்துக்கொண்டு வசித்து வருகிறோம். எங்களுக்கு சுனாமி குடியிருப்பு பகுதியில் வீடு கொடுத்தால் போதும். அங்கு சென்று நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம் என்று தெரிவித்தார்.

<u>மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை</u>

எண்ணூர், இந்திராகாந்தி குப்பம் மற்றும் அன்னை சிவகாமி நகர் ஆகிய இடங்களில் உள்ள கடலரிப்பு சுவரை தாண்டி கடல் நீர் தெருக்களில் புகுந்தது. இதனால் கடல் தண்ணீர் மூட்டு அளவு தேங்கி நிற்கிறது. தொடர்ந்து கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் கிராம மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். சிலர் அங்குள்ள சமுதாயக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அன்னை சிவகாமி நகர், இந்திராகாந்தி குப்பம் பகுதியில் உடனடியாக தூண்டில் வளைவு அமைத்து கடலோரத்தில் உள்ள மக்களின் உயிரையும், உடைமையையும் காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடல் சீற்றம் காரணமாக திருவொற்றியூர் நல்ல தண்ணீர் ஓடை குப்பம் முதல் நெட்டு குப்பம் வரையுள்ள கட்டுமரம் மற்றும் பைபர் படகுகளில் மீன்பிடிக்கச் செல்லும் 500–க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை

**டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**



மேட்டூர்,

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த ஆகஸ்டு மாதம் 2–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவ்வாறு திறக்கப்படும் தண்ணீர் பாசனத்தின் தேவைக்கு ஏற்ப அதிகரித்தும், குறைத்தும் வெளியேற்றப்படும். இதன்

அடிப்படையில் கடந்த 4–ந் தேதி முதல் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

தற்போது பாசன பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்து உள்ளதால், நேற்று முதல் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. மேலும், கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டதின் காரணமாக அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 83.21 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,627 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 9,400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**சேலம் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.40 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை**



சேலம் பள்ளப்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு சின்னசேலம், ஆத்தூர், வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம், தும்பல், குள்ளம்பட்டி, ஏ.என்.மங்கலம், பனமரத்துப்பட்டி, பாகல்பட்டி, கருப்பூர்,

வெள்ளாளக்குண்டம் போன்ற கிராமங்களில் இருந்து சுமார் 80 விவசாயிகள் 800 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

100 கிலோ எடை கொண்ட விரலி மஞ்சள் மூட்டை ஒன்றுக்கு அதிக பட்ச விலை ரூ.6,789 என்றும், குறைந்த பட்ச விலை ரூ.4,981 என்றும், குண்டு மஞ்சள் மூட்டை ஒன்றுக்கு அதிக பட்ச ரூ.5,749 என்றும், குறைந்த பட்ச விலை ரூ.3,149 என்றும், பனங்காலி மஞ்சள் அதிக பட்ச விலை ரூ.8,919 என்றும், குறைந்த பட்ச விலை ரூ.8.369 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஈரோடு, சேலம், நாமகிரிப்பேட்டை ஆகிய ஊர்களில் இருந்து வந்த 15 வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். மொத்தம் உள்ள 800 மூட்டை மஞ்சளும் ரூ.40 லட்சத்துக்கு விற்பனை ஆனது. விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**திருவொற்றியூர், எண்ணூரில் தொடரும் கடல்சீற்றம்: கடல்நீர் ஊருக்குள் புகுந்ததால் வீடுகள் சேதம் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை**



சென்னை

திருவொற்றியூர், எண்ணூரில் கடல் சீற்றம் காரணமாக கடல்நீர் ஊருக்குள் புகுந்தது. இதில் 5 வீடுகள் சேதம் அடைந்தன. கடல்சீற்றம் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

ஊருக்குள் புகுந்த கடல்நீர்

புயல் சின்னம் காரணமாக திருவொற்றியூர், எண்ணூர் பகுதியில் கடந்த சில நாட்களாக கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. கடலில் தோன்றிய ராட்சத அலைகள் கடல் அரிப்பை தடுக்க போடப்பட்டிருந்த கடல் அரிப்பு தடுப்புச்சுவரை தாண்டி வந்தன. இதனால் கடற்கரையோரத்தில் கட்டப்பட்டிருந்த 10–க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் கடல்நீர் புகுந்தது.

அப்பர் நகரைச் சேர்ந்த சுரேஷ், அப்பர்சாமி கோவில் தெருவில் கமலா, ரவி, அருள், கலைவாணன் ஆகிய 5 மீனவர்களின் வீடுகளை ராட்சத அலைகள் கடலுக்குள் இழுத்து சென்றது.

இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த தேசம் என்பவர் கூறுகையில், நாங்கள் தினமும் உயிரை கையில் பிடித்துக்கொண்டு வசித்து வருகிறோம். எங்களுக்கு சுனாமி குடியிருப்பு பகுதியில் வீடு கொடுத்தால் போதும். அங்கு சென்று நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம் என்று தெரிவித்தார்.

<u>மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை</u>எண்ணூர், இந்திராகாந்தி குப்பம் மற்றும் அன்னை சிவகாமி நகர் ஆகிய இடங்களில் உள்ள கடலரிப்பு சுவரை தாண்டி கடல் நீர் தெருக்களில் புகுந்தது. இதனால் கடல் தண்ணீர் மூட்டு அளவு தேங்கி நிற்கிறது. தொடர்ந்து கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் கிராம மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். சிலர் அங்குள்ள சமுதாயக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.அன்னை சிவகாமி நகர், இந்திராகாந்தி குப்பம் பகுதியில் உடனடியாக தூண்டில் வளைவு அமைத்து கடலோரத்தில் உள்ள மக்களின் உயிரையும், உடைமையையும் காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடல் சீற்றம் காரணமாக திருவொற்றியூர் நல்ல தண்ணீர் ஓடை குப்பம் முதல் நெட்டு குப்பம் வரையுள்ள கட்டுமரம் மற்றும் பைபர் படகுகளில் மீன்பிடிக்கச் செல்லும் 500–க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை